# 29-11-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : வரவுசெலவுத்திட்டம் 2013**

**tதொடக்கவுரையாடல் : S. கஜேந்திரன்**

அரசாங்க வரவுசெலவு திட்டம் என்பது, அடுத்த நிதியாண்டுக்கான அரசின் வரவுக்கும் செலவுக்குமான திட்டமாகும். இத்திட்டத்தினைப் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடவேண்டியது குடியரசொன்றின் கடமையாகும்.

வரிகள், தண்டப்பணம், அரசாங்கத்தின் முதலீடுகள்,

வெளிநாட்டு நிதி உதவிகள் போன்றன அரசின் வருமானங்கள். அரச இயந்திரத்தை இயக்குவதற்கான செலவு, அடிக்கட்டுமானங்களை உருவாக்கிப் பராமரிக்கும் செலவு, மக்கள் நலத்திட்டங்களுக்கான செலவு போன்றன அரசாங்கத்தின் முக்கிய செலவுகள்.

வரவுக்கும் செலவுக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியே துண்டுவிழும் தொகை எனப்படுகிறது. இத்துண்டு விழும் தொகையினைச்சரிப்படுத்த அரசாங்கங்கள் முனையும். திறைச் சேரி முறிகள், வரிகளைக்கூட்டுதல், கடனுதவி பெறுதல் போன்ற செயற்பாடுகளினூடாக இத்துண்டுவிழும்தொகை சரிப்படுத்தப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரம் உறுதியாய் இருக்கவேண்டுமானால் துண்டுவிழும் தொகை கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்.

துண்டு விழும் தொகையைக் கட்டுப்படுத்தும் வழிவகைகள் பற்றி உலகளாவிய நிதி நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் முன்வைக்கின்றன.

அவ்வாலோசனைகள் இந்நாட்டின் பொருளாதார அமைப்பில் மாற்றங்களைக் கோருவனவாக அமைகின்றன. குறிப்பாக மக்கள் நலத்திட்டங்களைக் கைவிடுவது, தனியார்மயமாக்கம் போன்றவையே ஆலோசனைகளாக அமைகின்றன.

> அரசாங்க வரவுசெலவுத்திட்டமானது கட்டிறுக்கமான கணக்கறிக்கையாக சில பக்கங்களில் சமர்ப்பிக்கப்படக்கூடியதாக இருந்தபோதும், வரவு செலவுத்திட்ட அறிக்கையானது முற்றிலும் அரசியல்மயப்படுத்தப்பட்டிருக்கும் எமது நாட்டின் சமகால நிலையில் கணக்கறிக்கை என்ற நிலையைத்தாண்டி ஒருவகை அரசியல் பிரசாரமாகவும் அரசியல் வீரதீரமாகவும் அது மாற்றப்பட்டுள்ளது.

இம்முறை வரவுசெலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டிருப்பது தெளிவாகத்தெரியும் ஒரு விடயமாகும்.
உள்நாட்டுப்போர் முடிவுற்று ஆண்டுகல் பல ஆகிவிட்ட நிலையிலும் கூட சென்ற ஆண்டை விட இவ்வாண்டு 60 பில்லியன் ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது.
இலங்கை இராணுவ சர்வாதிகார ஆட்சி ஒன்றை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக நோக்கர்கள் கருதுகிற வேளையில் அதனடிப்படையில் இப்பாரிய ஒதுக்கீட்டினையையும் காண்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

பொருளாதார வளர்ச்சி 7% என்று காட்டப்படுகிறது. இது எதிர்காலத்தில் மேலும் கூடலாம் என்றும் சொல்லப்படுகிறது.

நீர்ப்பாசனத்திட்டங்கள் போன்ற பல விடயங்கள் இம்முறை வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இது விவசாயிகள் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வரவுசெலவுத்திட்டம் போன்ற தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

முக்கியமான இரு அரச நிறுவனங்களின் நட்டம் காட்டப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் இவ்வரவுசெலவுத்திட்டம் மீது குற்றம் சுமத்துகின்றன.

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**இலங்கையில் பெருகிவரும் பாலியல் குற்றங்கள்**
க. ஆதித்தன் | 06-12-2012

**முதுமை பற்றி ஓர் உரையாடல்**
திரு. இராஜரட்ணம் | 13-12-2012



மாக்ஸ் முல்லர்

மாக்ஸ் முல்லர் (டிசம்பர் 6, 1823 - அக்டோபர் 28, 1900), என்று பரவலாக அறியப்பட்ட பிரெட்ரிக் மாக்ஸ் முல்லர் (Friedrich Max Müller) ஒரு ஜெர்மானிய மொழியியலாளரும், கீழைத்தேச ஆய்வாளரும் ஆவார். இந்திய ஆய்வியலைத் தொடக்கி வைத்தவர்களுள் ஒருவராகக் கருதப்படும் இவர், சமய ஒப்பாய்வுத் துறையை உருவாக்கியவராகவும் கருதப்படுகிறார். இத் துறையில் இவர், ஆய்வு நூல்களையும், சாதாரண பொதுமக்களுக்கான நூல்களையும் எழுதியுள்ளார். இவருடைய மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட, கிழக்கத்தியப் புனித நூல்கள் (Sacred Books of the East) என்னும் பெயர்கொண்ட 50 தொகுதிகள் அடங்கிய பெரிய நூல் விக்டோரியா காலத்தின் ஆய்வு முயற்சிகளுக்குச் சான்றான ஒரு நினைவுச் சின்னமாக இன்றும் திகழ்கிறது.

இவர்,ஆரியர்கள் கி.மு 1500 ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்குள் புகுந்ததாகக் கூறினார். வேதக் கடவுள்களுக்கும், கிரேக்க, ரோம மற்றும் நோர்ஸ் புராணங்களில் காணும் கடவுள்களுக்கும் தொடர்பு கண்ட அவர், ஐரோப்பியப் பண்பாடு மத்திய ஆசியாவைச் சேர்ந்த ஆதி ஆரியர்களிடமிருந்தே தோன்றியிருக்கலாம் எனவும் கணித்தார்.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## வரவுசெலவுத்திட்டம் 2013

முன்பக்கத் தொடர்ச்சி..

அரசாங்க வரவுசெலவுத்திட்டமானது கட்டிறுக்கமான கணக்கறிக்கையாக சில பக்கங்களில் சமர்ப்பிக்கப்படக்கூடியதாக இருந்தபோதும், வரவு செலவுத்திட்ட அறிக்கையானது முற்றிலும் அரசியல்மயப்படுத்தப்பட்டிருக்கும் எமது நாட்டின் சமகால நிலையில் கணக்கறிக்கை என்ற நிலையைத்தாண்டி ஒருவகை அரசியல் பிரசாரமாகவும் அரசியல் வீரதீரமாகவும் அது மாற்றப்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே கணக்கறிக்கை போல அல்லாமல் பந்தி பந்தியாக தேர்தல் பிரசாரப் பிரசுரம் போல அது வடிவமைக்கப்படுகிறது.

வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்கச் செலவுகளாக ஒதுக்கப்படும் பணமும், அச்செலவுகளுகான திட்டங்களும் நாட்டு மக்களின் வாழ்விலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக இருக்கின்றமையே வரவு செலவுத்திட்டத்தினை மக்களாகிய நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டியதற்கான அடிப்படைக் காரணமாகும்.

**இம்முறை வரவுசெலவுத்திட்டத்தில் கவனிக்கத்தகுந்த குறிப்புக்கள்:**

*2013 ஆம் ஆண்டு வடக்கில் மாகாண சபைத் தேர்தல்

*பாதுகாப்பு பிரிவினருக்காக 3 வருடங்கள் செல்லுபடியாகும் வகையில் நிவாரண வீட்டுக் கடன் வசதி. அதற்கென 2013 வரவு - செலவு திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

*வறிய பிரதேச மாணவர்களுக்காக சத்துணவும் சப்பாத்தும் வழங்கப்படும். நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கு அரையாண்டுக்கு ஒரு தடவை சீருடை

*சுற்றுலாத்துறை வருமானமாக 2.5 பில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுகிறது

*வறட்சியினால் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள விவசாயிகள் வங்கிகளில் பெற்றுக்கொண்ட கடன்கள் பெரும்போகம் வரை நீக்கம். வட்டி முற்றாக நீக்கம்

*நீர்ப்பாசன அபிவிருத்திக்காக 102 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

*லக் சத்தொச விற்பனை நிலையங்களை ஆயிரமாக அதிகரிப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

*மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு 2000 மில்லியன் ரூபா

*சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்கு ஹெக்ரெயர் ஒன்றுக்கான உதவித் தொகை 3 இலட்சத்திலிருந்து 3 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரிப்பு

*தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திய, உற்பத்திகளின் தரத்தை முறையாகப் பேணிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவி

*ஆடைத் துறையிலிருந்து 5000 மில்லியன் டொலர் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது

*2013 ஆம் ஆண்டில் பொலனறுவை, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தத்திட்டமிட்டுள்ள தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கு 60 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

*வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்கத் தடை

*சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்காக 125 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

*கல்வித் துறைக்கு 306 பில்லியன் ரூபா (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 வீதம்) ஒதுக்கீடு

*ஊடகவியலாளர், கலைஞர்களுக்கு வட்டியில்லா கடனைப் பெற்றுக்கொடுப்பதற்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

*அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு 1500 ரூபாவாக அதிகரிப்பு

*நிரந்தர வருமானமில்லாத 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 5000 ரூபா

## இலங்கையில் பெருகிவரும் பாலியல் குற்றங்கள்

**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )**

* இலங்கையில் பாலியல் குற்றங்களின் பரம்பல்

* மனிதர்களின் பாலியல் தேவை பற்றிய சமூக மற்றும் விஞ்ஞான ரீதியான பார்வைகள்

* பாலியல் குற்றங்களின் பெருக்கத்தில் பிரதான பங்காளிகளான வெகுஜன ஊடகங்கள்

* பாலியல் சுதந்திரம்

* பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர் எதிர் கொள்ளும் சவால்கள்

* இப்பிரச்சனையை ஒட்டி முன்வைக்கப்பட்டு வரும் தீர்வுகள் பற்றிய கலந்தாய்வு




மருந்து வணிக மாஃபியா

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA